வணக்கம்

ஆகாஷ்வாணி – புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 24.09.2026 – வியாழக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

- மக்கள் சேவையே, மனித வாழ்வின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும் என, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- இந்தியாவின் கடற்கரையை, வர்த்தகம், மற்றும், வளர்ச்சிக்கான உந்து சக்தியாக மாற்றுவதில், மத்திய அரசின் சாகர்மாலா திட்டம் முக்கியப் பங்காற்றி வருகிறது.
- மத்திய அரசு, கச்சா சமையல் எண்ணெய் இறக்குமதி மீதான அடிப்படை சுங்க வரியைக் குறைத்து அறிவித்துள்ளது.
- 2030ஆம் ஆண்டிற்குள் புதுச்சேரி, காசநோய் இல்லாத மாநிலமாக மேம்படும் என்று, முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார்.

மோடி சேவா -1 (08)

ஒவ்வொரு மனிதருக்கும், சேவையே, வாழ்வின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும் என பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று, வாத்நகர் முதல், வாரணாசி வரையிலான யாத்திரையில் ஈடுபட்டுள்ள சேவை யாத்ரீகர்களுடன், மெய்நிகர் முறையில் நடத்திய கலந்துரையாடலில் அவர் இவ்வாறு கூறினார். அரசியலில் கூட, சேவை தான் முக்கிய நோக்கம் என்றும், ஒருவர் எந்த நிலைக்கு உயர்ந்தாலும், சேவை உணர்வை விட்டுவிடக் கூடாது என்றும் அவர் கூறினார்.

மோடி சேவா – வாய்ஸ் (17)

(வாய்ஸ்)

சமுதாயத்தின் கடைக்கோடி மனிதன் வரை சேவை புரிவதே அரசுத் திட்டங்களின் நோக்கம் என்றும், சூர்யகர், பிஎம்-கிஸான் போன்ற அரசின் பல்வேறு திட்டங்களே இதற்குச் சான்றாகும் என்றும் பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார். சேவை உணர்வு, அரசுக் கொள்கைகளின் உந்து சக்தியாக இருந்தால் தான், நாடு முன்னேற முடியும் என்றும், நாட்டில் 25 கோடி ஏழைகள் வறுமையில் இருந்து விடுவிக்கப்பட்டு, 4 கோடி ஏழைகளுக்கு, கல்வீடு கிடைத்து இருப்பதற்கு இதுவே காரணம் என்றும் அவர் தெரிவித்தார். 2047ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்க எட்ட, இளைஞர்கள் உட்பட ஒவ்வொருவரும், சேவை உணர்வுடன் பாடுபட வேண்டும் என பிரதமர் கேட்டுக் கொண்டார். இன்றைய இளைஞர்கள், முன்னேறிய இந்தியாவின் சிற்பிகளாக மட்டுமின்றி, முன்னேறிய இந்தியாவின் பயனாளிகளாகவும் திகழ்வதாகவும் அவர் குறிப்பிட்டார். நிகழ்ச்சியின் போது, சேவா யாத்ரீகர்கள், தங்களின் அனுபவங்களை பிரதமருடன் பகிர்ந்து கொண்டனர். யாத்திரையின் ஒரு பகுதியாக, மரக்கன்றுகளை நடும் பணிகள் மற்றும் தூய்மைப் பணிகளில் இவர்கள் ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

சேவா சங்கல்ப் -1 (14)

மக்கள் சேவை மூலமான தேச சேவை என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், பொது சேவையில் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்யும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் சேவைப் பயணம், இன்று வரை அயராத உறுதிப்பாட்டுடன் தொடர்கிறது. சேவை மற்றும் நல்லாட்சி என்னும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப, 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை நோக்கி, நாடு தொடர்ச்சியாக பயணித்து வருகிறது. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி-அனைவருக்கும் சமூக அதிகாரம் என்னும் அரசின் கொள்கையினால், நாட்டு மக்களின் வாழ்க்கையில்

பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சேவா சங்கல்ப் அபியான் என்னும், இந்த சிறப்பு தொடரில், பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலை நோக்கு பார்வை அடிப்படையிலான, சாகர்மாலா திட்டத்தினால், துறைமுகங்கள் மூலமான நாட்டின் பொருளாதார வளர்ச்சி

சேவா சங்கல்ப் -2 வாய்ஸ் (18)

(வாய்ஸ்)

துறைமுகங்களை, உற்பத்தி மையங்கள், விற்பனை சந்தைகள், மற்றும், மக்களுடன் ஒருங்கிணைப்பதன் மூலம், கடலோரப் பகுதிகளை வளர்ச்சிக்கான உந்து சக்தியாக மாற்றும் நோக்கிலான சாகர்மாலா திட்டம், 2015ஆம் ஆண்டில் தொடக்கப்பட்டது. துறைமுகங்களின் நவீன மயம், துறைமுகங்களுக்கும், இதர போக்குவரத்து கட்டமைப்புகளுக்கும் இடையிலான ஒருங்கிணைப்பு, துறைமுகங்களை மையமாகக் கொண்ட தொழில்மயம், கடலோரப் பகுதி மக்களின் சமூக மேம்பாடு, கடலோர மற்றும் உள்நாட்டு நீர் வழிப்பாதைகளின் கூடுதல் மேம்பாடு ஆகிய 5 தூண்களை அடிப்படையாகக் கொண்டு இத்திட்டம் அமலாகி வருகிறது.
இத்திட்டத்தின் விளைவாக நாட்டில் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சாகர்மாலா திட்டத்தின் கீழ் மொத்தம் 6 லட்சத்து 6 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் இனம் காணப்பட்ட, 845-க்கும் பணிகளில், சுமார் 315 பணிகள் ஏற்கனவே நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளன.

பெரிய துறைமுகங்களில் கப்பல்கள் தங்கி நிற்கும் காலம், 2014ஆம் ஆண்டில் 96 மணி நேரமாக இருந்த நிலையில் இருந்து, கடந்த ஆண்டு, 49 மணி நேரமாக குறைந்துள்ளது. தற்போது 9 இந்திய துறைமுகங்கள், உலகின் முதல் 100 முக்கிய துறைமுகங்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

## சேவா சங்கல்ப் -3 வாய்ஸ் (10)

2014ஆம் ஆண்டில், முக்கியமான இந்திய துறைமுகங்களின் சரக்கு கையாளுகைத் திறன், ஆண்டுக்கு 873 மில்லியன் டன்னாக இருந்த நிலையில், தற்போது இது, ஆண்டுக்கு ஆயிரத்து 728 மில்லியன் டன்னாக, 2 மடங்கு அதிகரித்துள்ளது.

நாட்டில், சரக்குகளின் அளவு அடிப்படையிலான வர்த்தகத்தில் 95 சதவிகிதமும், சரக்குகளின் மதிப்பு அடிப்படையிலான வர்த்தகத்தில் 70 சதவிகிதமும், தற்போது கடல்சார் போக்குவரத்துப் பாதைகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தியாவின் நீண்ட கடற்கரை, புவியியல் அனுகூலமாக மட்டுமின்றி, வளர்ச்சி, வர்த்தகம், மற்றும், வேலை வாய்ப்புகளுக்கான உந்து சக்தியாகவும் மேம்பட்டு இருப்பதில் ஐயமில்லை.

## சமையல் எண்ணெய் (08)

மத்திய அரசு, உள்நாட்டுச் சந்தையில் சமையல் எண்ணெய் விலை நிலவரங்களைக் கட்டுப்படுத்தும் வகையில், கச்சா சமையல் எண்ணெய் இறக்குமதி மீதான அடிப்படை சுங்க வரியைக் குறைத்துள்ளது. கச்சா சூரிய காந்தி எண்ணெய் மீதான 10 சதவிகித வரி பூஜ்யமாகவும், கச்சா பாமாயில் மீதான 10 சதவிகித வரி 5 சதவிகிதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது. வரி குறைப்பின் பலன்கள், உடனடியாக நுகர்வோருக்கு கிடைப்பதை உறுதிப்படுத்துமாறு, சமையல் எண்ணெய் தொடர்பான தொழில் துறையினர் மற்றும் வணிகர் சங்கங்களையும் அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

## ஜிப்மர் (10)

புதுச்சேரி ஜிப்மரில், மேம்பட்ட மரபணு பரிசோதனைகள் மூலம் காசநோயைக் கண்டறிதல் என்பது குறித்த, 3 நாள் தேசிய மாநாட்டை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார். புதுச்சேரியில் மொத்தமுள்ள 148 கிராமங்களில், 36 கிராமங்கள், காசநோய் இல்லாத நிலைக்கு மேம்பட்டுள்ளதாகவும், மத்திய-மாநில அரசுகளின் தொடர்ச்சியா

முயற்சிகளால், 2030ஆம் ஆண்டிற்குள் புதுச்சேரி, காச நோய் இல்லாத மாநிலமாக மேம்படும் என்றும் அவர் கூறினார். ஜிப்மர் வளாகத்தில் உள்ள ஏபிஜே அப்துல் கலாம் கலையரங்கில் நடைபெற்ற தொடக்க விழாவில், அரசு கொறடா திரு. ஏகேடி ஆறுமுகம், ஜிப்மர் இயக்குநர் டாக்டர் வீர்சிங் நேகி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ரெட்டியார் (06)

புதுச்சேரியில் தியாகி முத்துக்குமரப்ப ரெட்டியார் பிறந்த நாள் இன்று அரசு சார்பில் கொண்டாடப்பட்டது. நெட்டப்பாக்கம் காவல் நிலையம் அருகே அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு. ராஜவேலு, மக்களவை உறுப்பினர் திரு வைத்திலிங்கம், சட்டமன்ற உறுப்பினர் திரு. சாய் சரவணன் குமார் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

புதுச்சேரி தூய்மை (06)

புதுச்சேரியில் நகராட்சி நிர்வாகம் சார்பில், white town பகுதியில் இன்று நடைபெற்ற, Plog Run என்னும் குப்பையெடுப்பு ஓட்டத்தை சட்டமன்ற உறுப்பினர் திரு. விக்னேஷ் கண்ணன் தொடக்கி வைத்தார். நகராட்சி ஆணையர் திரு. கே.பி. ஸ்ரீஜித் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களுக்கு, ஸ்வச்சதா உறுதிமொழியும் செய்து வைக்கப்பட்டது.

பள்ளித் தூய்மை (04)

புதுச்சேரியில் தூய்மையே சேவை இயக்கத்தின் ஒரு பகுதியாக, ஸ்வச் பாடசாலா தூய்மைப் பணிகள், SADP பள்ளியில் இன்று நடைபெற்றன. நீர் மேலாண்மை மற்றும் நீர் சேமிப்பு குறித்து, மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

## காரைக்கால் பாலியல் (07)

பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்களைத் தடுப்பது குறித்து, அரசுத் துறை அலவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான, விழிப்புணர்வு முகாம் காரைக்காலில் இன்று நடைபெற்றது. புதுச்சேரி மகளிர் ஆணையத் தலைவர் திருமதி நாகஜோதி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு. நாஜிம், காரைக்கால் சார்பு ஆட்சியர் திருமதி பூஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மழை – ஏனாம் (10)

வங்கக் கடலில் உருவான ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், இன்று அதிகாலை, கலிங்கப்பட்டினம் அருகே, கரையைக் கடந்த பின்னர், படிப்படியாக வலுவிழந்து வருகின்ற போதிலும், வடக்கு ஆந்திரா மற்றும் ஒடிசா கடலோரப் பகுதிகளில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. ஆந்திரத்தை ஒட்டியுள்ள புதுச்சேரியின் ஏனாம் பகுதியில், கடந்த 24 மணி நேரத்தில் 14 சென்டிமீட்டர் மழை பதிவாகியுள்ளது. ஏனாமில் குடியிருப்பு பகுதிகள் உட்பட பல்வேறு இடங்களில் மழை நீர் தேங்கி இருப்பதாக எமது ஏனாம் நிரூபர் தெரிவிக்கிறார். மழை நிலவரங்களைக் கருத்தில் கொண்டு இன்று ஏனாமில், அனைத்து பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டு இருந்தது.

## வானிலை (09)

தமிழகத்தில் இன்று மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், மற்றும், சென்னை, காஞ்சீபுரம், செங்கல்பட்டு உள்ளிட்ட மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தின் இதர பகுதிகள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், இன்று பொதுவாக வறண்ட வானிலையே நிலவும் என்றாலும், அடுத்த சில நாட்களில் லேசான மழை இருக்கலாம் என்றும், வரும் 30ஆம் தேதி வரை மழை நீடிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆசிய விளையாட்டு (11)

ஜப்பானில் நடைபெறும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் ஆடவர் இரட்டை துடுப்பு போட்டியில், சத்நாம் சிங்-சல்மான் கான் ஆகியோர் அடங்கிய இந்திய அணி வெண்கலப் பதக்கம் வென்றுள்ளது. ஆடவர் கபடி பிரிவில், இந்திய அணி, சீன தாய்பே அணிக்கு எதிராக வெற்றி பெற்று, அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது. A-பிரிவில் இடம் பெற்றுள்ள இந்திய அணிக்கு, இது, தொடர்ச்சியாக 4ஆவது வெற்றியாகும். இதற்கு முந்தைய போட்டிகளில், தென்கொரியா, ஜப்பான் மற்றும் வங்கதேச அணிகளை, இந்திய அணி தோற்கடித்துள்ளது. இதற்கிடையே, ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் மகளிர் கபடி பிரிவிலும், இந்திய அணி, ஏற்கனவே, ஈரான் மற்றும் வங்க தேச அணிகளை தோற்கடித்துள்ளது.

கிருஷ்ணன் (11)

மொபைல் தொலைபேசிகளுக்கான நாட்டின் மொத்த தேவையில் சுமார் 99.2 சதவிகிதம், தற்போது உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுவதாக மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை செயலர் திரு. எஸ்.கிருஷ்ணன் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், இந்திய பொது விவகாரங்கள் பேரவையின் வருடாந்திர கூட்டத்தில் உரையாற்றிய அவர், இந்தியாவில் தற்போது, ஆண்டுக்கு 33 கோடி மொபைல் தொலைபேசிகள் உற்பத்தி செய்யப்படுவதாக தெரிவித்தார். உலக அளவிலான 5 முக்கிய மொபைல் தொலைபேசி உற்பத்தி நிறுவனங்கள் இந்தியாவில் செயல்பட்டு வருவதாகவும், உற்பத்தியை மேலும் அதிகரித்து, உலகச் சந்தையில் போட்டியிட ஏதுவாகவே, மொபைல் தொலைபேசி உற்பத்தி திட்டத்தை அரசு தொடக்கி இருப்பதாகவும் அவர் கூறினார்.